Registered as a Newspaper In Sri Lanka

விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 1 28-1-1985 திங்கட்கிழமை (இரத்தாக்ஷி தை 15) முழக்கம் 187

## ஆரையம்பதியில் கைதானோரில் 57 இளைஞர்கள் காவலில்!

(மட்டுநகர்)

மட்டுநகர் ஆரையம்பதிக் கிராமத்தை நேற்று அதிகாலை முதல் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்திய பாதுகாப்புப் படையினர் நான்கு லொறி களில் சுமார் இருநூறுக்கும் அதிகமான இளைஞர்களை ஏற்றி தமது முகா முக்குக் கொண்டு சென்றனர் நண்பகலுக்குச் சற்று பின்னர் இவ்வாறு கொண்டு செல்லப்பட்ட இளைஞர்கள் அங்கு 'மர்மமான' மனிதர் முன் னால் விடப்பட்டு அடையாளம் காணப்பட்டதாகவும், ஐம்பத்தேழு பேரைத் தவிர மிகுதி இளைஞர்கள் அனைவரும் நேற்று மாலை விடுதலை செய்யப் பட்டதாகவும் தெரிய வந்துள்ளது. குறிப்பிட்ட 57 பேரும் மேல் விசார ணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

# கடத்தப்பட்ட 2 பொலிஸ் இன்ஸ்பெக்டர்களும் நலமுடன் இருப்பதாக மனைவியருக்குக் கடிதம்!

(குருநாகல்)

டிசம்பர் மாதம் 21ம் திகதி யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் வைத்துக் கடத்தப்பட்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர்களான றெறன்ஸ் சில்வாவும், நாணயக்காரவும் தாம் சுகமாக இருப்பதாக தங்கள் மனைவியருக்குக் கடிதம் எழுதியுள்ளார்கள்.

குருநாகல் பொலிஸ் நிலைய விடுதியிலிருக்கும் இருவரது மனைவியருக்கும் இக் கடிதங்கள் கடந்த வெள்ளிக்கிழமை 25ம் திகதி கிடைத்துள்ளன. தம்மை விடுவிப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்யுமாறு இவர்கள் இக்கடிதங்களில் தமது குடும்ப உறவினர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக கொழும்பு பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பணயப் பணத்தைத் தாம் கட்டத் தயாராகவிருப்பதாகவும், இதற்கு என்ன செய்யலாமென்றும் திருமதி. றெறன்ஸ் சில்வாவும், திருமதி. நாணயக்காரவும் பொலிஸ் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டுள்ளனர் இரு பகுதியினருக்குமிடையில் பேச்சு வார்த்தை நடத்தக் கூடிய ஏதாவது பொது அமைப்பொன்றின் பிரதிநிதியூடாக பிரச்சினையைத் தீர்த்து வைக்க கடத்தப்பட்ட இன்ஸ்பெக்டர்களின் மனைவியர் விரும்புவதாக சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் திரு ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

# அடம்பன் சூட்டுச் சம்பவத்தில் ஒரே குடும்பத்தில் நால்வர் பலி!

## சூடுபட்டவரை ஏற்றச் சென்ற ஜீப்புக்கும் குண்டுவீச்சு; இரு பஸ்களை காணவில்லையாம்

(மன்னார்)

அடம்பனில் சிறு வர்த்தகம் செய்து வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய் உட்பட நான்கு பேர் நேற்று அதிகாலை மூன்று மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதே குடும்பத்தைச் சேர்ந்த நெருங்கிய உறவினர்களான மேலும் சிலர் கடத்திச் செல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. "தகவல் கொடுப்பவர்கள்" என்ற சந்தேகத்தின் பேரில் இக்கொலைகள் இடம்பெற்றிருக்கலாம் என விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

இரண்டு வான்களிலும் ஒரு ட்ராக்டரிலும் சென்ற சுமார் இருபத்தைந்துக்கும் அதிகமான இளைஞர்கள் இக் கொலைகளைச் செய்திருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

இரண்டு சடலங்கள் அடம்பனில் பொதுமக்கள் நடமாடும் இடமொன்றில் காணப்பட்டதாயினும் பொலிசாரோ ஆயுதப்படையினரோ நேற்று மாலை வரை சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் செல்லவில்லை. வழியில் எங்காவது கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தே

—4 ஆம் பக்கம் பார்க்க

## கல்வியங்காடு, இருபாலையில் திடீர் இராணுவ நடமாட்டம்

(கல்வியங்காடு)

கல்வியங்காடு, இருபாலைப் பகுதிகளை நேற்றுப் பிற்பகல் திடீரென இராணுவத்தினர் முற்றுகையிட்டதால அந்தப் பகுதி சில மணிநேரம் பதற்றமடைந்து பீதியுடன் காணப்பட்டது.

பெரும் தொகையான கவச வாகனங்கள், ட்ரக்குகள், வான்களில் அணி அணியாக இராணுவத்தினர் பருத்தித்துறை வீதி வழியாகச் சென்றபோது ஹெலிகப்டர் ஒன்று தாழப் பறந்து வட்டமிட்டுக் கொண்டிருந்தது,

வானத்திலிருந்து சில துப்பாக்கி வேட்டுக்கள் அங்குமிங்குமாகக் கேட்ட போதும், எவரும் காயமடையவில்லையெனத் தெரிய வந்துள்ளது.

இருபாலை கல்வியங்காடு பழம் வீதியில் பிரயாணிகளு

—4ம் பக்கம் பார்க்க

## கச்சதீவுக்கருகில் வைத்து தமிழக மீனவர் ஒப்படைப்பு

(மன்னார்)

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு உயர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட பதினேழு தமிழக மீனவர்களும் கைப்பற்றப்பட்ட அவர்களது படகுகளுடன் இன்றுகாலை இந்திய அதிகாரிகளிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப் படுவர்.

திருமலை ஊடாக சிறு கப்பலொன்றில் நேற்று நண்பகல் தலைமன்னார் கொண்டுவரப் பட்ட பதினேழு மீனவர்களும் இன்று அதிகாலைவரை கடற்படையினரின் பலத்த பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தனர்.

கச்சதீவுக்கு அருகாமையில்

—4ஆம் பக்கம் பார்க்க

ராணுவம் சுட்டு இருவர் படுகாயம்: பலர் கைது

# கண்ணிவெடி தாக்குதல் முயற்சியில் ராணுவம் மயிரிழையில் தப்பியது!

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித்தாக்குதல் முயற்சி ஒன்றில் பாதுகாப்புப் படையினர் மயிரிழையில் தப்பியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. காங்கேசன்துறை கீரிமலை வீதியில் இம்முயற்சி நேற்றுக்காலை நடைபெற்றுள்ளது.

இப் பாதையிலுள்ள மாவிலொன்றுக்கு அருகாமையில் வீதியின்கீழ் கண்ணிவெடிகள் புதைத்து வைக்கப்பட்டிருந்ததாம் பாதுகாப்புப் படையினர் ஜீப்பில் வந்துகொண்டிருந்தபோது, அவர்களுக்கு முன்

—4-ம் பக்கம் பார்க்க

### ★ பிந்திய செய்தி

காங்கேசன்துறைச் சம்பவத்தின்போது சிலவீடுகள் எரிக்கப்பட்டதாகவும், துப்பாக்கிச் சூட்டுக்கு ஒருவர் மரணமாக நேர்ந்ததாகவும் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

## வல்வெட்டித்துறை சம்பவம் இராணுவ வீரருக்கு காயம்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறையில் வெடிகுண்டுகள், மருந்துகளுடன் வந்த லொறி ஒன்றை ஆயுதப்படையினர் சோதனையிட்ட போது இடம்பெற்ற எதிர்பாராத விபத்தொன்றில் ராணுவ வீரர் ஒருவர் சிறு காயமடைந்ததாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இங்குள்ள ஊரிக்காடு என்னும் இடத்தில் நேற்று நண்பகலுக்குப் பின்னர் இச்சம்ப

—4-ம் பக்கம் பார்க்க

வண்ணை வீரமாகாளி, யாழ். கதிரேசன் ஆலய நகைகள் உட்பட

## வங்கிக் கொள்ளை நகைகளின் பெறுமதி இருநூறு லட்சம் ரூபாவுக்கும் அதிகம்!

யாழ்ப்பாணம் ஹட்டன் நாஷனல் வங்கியில் நேற்று முன்தினமிரவு கொள்ளையடிக்கப்பட்ட நகைகளின் பெறுமதி சுமார் இருநூறு லட்சம் ரூபாவுக்குமதிகமாயிருக்கலாமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

வங்கியின் பாதுகாப்புப் பெட்டியில் நகைகளை வைத்தவர்களில் பலர் நேற்று வங்கிக்கு வருகைதந்து, தமது பெட்டிகள் இருக்கின்றனவா என்பதைப் பார்வையிட்டனர். சிறு பாதுகாப்புப் பெட்டிகளில் சில அங்கு உடைக்காதிருக்கக் காணப்பட்டன.

யாழ்ப்பாணம் கதிரேசன் ஆலய நகைகள் வைக்கப்பட்டிருந்த சூட்கேஸ், நகைகள் முழுவதும் கொள்ளையடிக்கப்பட்ட நிலையில், அனாதரவாக வங்கிக்குள் கிடக்கக் காணப்பட்டது. இதற்குள்ளிருந்த விக்கிரக நகைகளின் சரியான பெறுமதி மதிப்பிடப்படவில்லை

சுமார் ஐம்பது தங்கப்பவுணில் செதுக்கப்பட்ட முருகன் விக்கிரகமொன்றும் இதற்குள் இருந்ததாம். அதுவும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

வண்ணை வீரமாகாளி அம்

—4-ம் பக்கம் பார்க்க

### மாதகலில் மீண்டும் பீரங்கிக் குண்டு

(பண்டத்தரிப்பு)

மாதகல் கடற் பகுதியிலிருந்து நேற்று முன்தினமிரவும் பீரங்கிக் குண்டுகள் கரைப் பகுதியை நோக்கிப் பலத்த சப்தத்துடன் வந்ததாகப் பொது மக்கள் புகார் செய்துள்ளனர்.

—4-ஆம் பக்கம பார்க்க

மேலும் உதவி பெறுவதற்காக

## றிச்சேர்ட் மர்பியுடன் லலித் இன்று முக்கிய பேச்சு!

(கொழும்பு)

தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி இலங்கையின் தற்போதைய நிலை குறித்து இன்று அமெரிக்க வெளிவிவகார இணையமைச்சர் திரு றிச்சேர்ட் மர்பியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

திரு. மர்பி வடகிழக்கு, தென்கிழக்காசிய நாடுகள்விவ

—4-ம் பக்கம் பார்க்க

# மன்னாரில் மரணித்தோருக்கு ஆலய விழாவில் துக்க பூசை

(மன்னார்)

அண்மையில் மாணமான வங்காலை பங்குத்தந்தை அருட்திரு. மேரி பஸ்ரியன், முருங்கன் சேகரத்தில் கடமையாற்றிய அருட்திரு ஜெயராஜசிங்கம், மற்றும் ஏனைய பொது மக்கள் ஆகியோருக்கு அனுதாபம் தெரிவிக்கும் பொருட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற புனித செபஸ்தியார் திருநாள் மன்னார் மாவட்டத்தில் துக்கமாகக் கொண்டாடப்பட்டது.

இத் திருநாளை மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த றோமன் கத்தோலிக்க மதத்தினரும், மெதடிஸ்த திருச்சபையும், பெந்தகோஸ் சபையும் ஒன்றிணைந்து துக்கமாகக் கொண்டாடின

அன்றைய தினம் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தின் சுற்றாடலில் வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

திருநாள் திருப்பலிப் பூசையில் கலந்து கொண்டோர் கறுப்பு, வெள்ளை உடைகளையும், கறுப்புப்பட்டியும் அணிந்திருந்தனர்.

இதேபோல் மன்னார் மெதடிஸ்த தேவாலயத்திலும், பெந்தகோஸ்து தேவாலயத்திலும் சபையினர் வெள்ளை உடைகளை அணிந்து ஆராதனையில் கலந்து கொண்டதுடன் விசேட ஜெப வழிபாட்டிலும் கலந்து கொண்டனர்.

இவர்கள் அன்றைய தினம் தமது மதிய உணவை ஏழைகளுக்கு தானம் செய்தனர்.

## இலவச பால்மா

(நல்லூர்)

யாழ். வை. எம். சி ஏ ஸ்தாபனம் தனது சமூகசேவை நலத் திட்டத்தின்கீழ் அரியாலை மேற்கு காந்தி சன சமூக நிலையம், ஸ்ரீ கலைமகள் சன சமூக நிலையம ஆகியவற்றால் நடாத்தப்பட்டு வரும் பாலர் பாடசாலைகளில் கல்வி கற்றுவரும் பிள்ளைகளுக்கு ஊட்டச்சத்து நிறைந்த பால்மா, பிஸ்கற் ஆகியவற்றை வழங்குவதுடன், ஆசிரியைகளின் வேதனத்தின் ஒரு பகுதியையும் தைமாதம் தொடக்கம் வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

## கொள்ளை நடைபெறவில்லை

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இம் மாதம் 21-ம் திகதி பணம் கொள்ளையடிக்கப்படவில்லை என்று மேற்படி சங்கப் பொதுமுகாமையாளர் திரு பொ. சோமாஸ்கந்தன் அறிவித்துள்ளார்.

## வருடாந்த உற்சவம்

திருநெல்வேலி கிழக்கு அருள்மிகு ஸ்ரீ பூதநாத சுவாமி தேவஸ்தான வருடாந்த உற்சவம் 27 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகியது. இது பெப்ரவரி ஆறும் திகதிவரை நடைபெறும். இன்றைய நாட்டு நிலையைக் கருத்திற் கொண்டு இரவு உற்சவங்கள் மாலை ஐந்து மணியுடனேயே முடிவடையும். தினமும் காலை பத்து மணிக்கு அபிஷேகமும் மாலை 4-30 க்கு வீதி வலமும் இடம்பெறும். இறுதி நாளான ஆறும் திகதி மாலை மூன்று மணிக்கு திருப் பொன்னூஞ்சல் நடைபெறவுள்ளது.

# நல்லை ஆதீனம் நடத்தும் மனனப் போட்டி விபரம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவிருக்கும் திருமுறை முற்றோதல் விழாவையொட்டி, எதிர்வரும் சித்திரை மாதம் பதினெட்டு வயதுக்குட்பட்ட இளைஞர்களிடையே (26-4-1967க்குப் பின்னர் பிறந்தவர்கள்) தேவார, திருவாசக மனனப்போட்டிகள் நான்கு, ஆதீனத்தால் நடத்தப்படும்.

போட்டிகளுக்கென திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம் பத்துத் திருப்பதிகங்கள், திருநாவுக்கரசு நாயனார் தேவாரம் பத்துத் திருப்பதிகங்கள், சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம் பத்துத் திருப்பதிகங்கள், மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்—திருச்சதகம் ஆகியன ஆதீனத்தால் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன.

இவை நான்கும் தனித்தனிப் போட்டிகளாகும் ஒருவர் எத்தனை போட்டியில் வேண்டுமானாலும் கலந்து கொள்ளலாம் குறித்த பகுதிகளை மனனஞ் செய்து பிழையற ஒப்பிக்கும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருபோட்டிக்கும் தனித்தனி வெண் பொற் பதக்கம் பரிசிலாக வழங்கப்படும்.

போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் தமது முழுப் பெயர் முகவரி, பிறந்த திகதி, பாடசாலை, பங்குபற்ற விரும்பும் போட்டி ஆகிய விபரங்களைக் கொண்ட விண்ணப்பத்தைப் பெப்ரவரி 28க்கு முன் கிடைக்கக் கூடியதாக நல்லை ஆதீனத்துக்கு அனுப்ப வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி விண்ணப்பம் அனுப்பவேண்டும்.

## மழைச் சேதம்

(சுழிபுரம்)

அண்மையில் பெய்த மழையால் இப்பகுதி நெற்பயிர்களுக்கும், மிளகாய், வெங்காயம் போன்ற சிறுபயிர்களுக்கும் அழிவுண்டாகியுள்ளது.

இப்பகுதி வீதிகள் மேலும் சீர்கேடடைந்துள்ளன பாரிய குழிகள் வீதியின் நடுவில் ஏற்பட்டுள்ளன. பாதசாரிகளும் மற்றும் வாகன பயணிகளும் வெள்ளத்தாலும் தெருச் சீர்கேடாலும் பெரும் அல்லலுறுகின்றனர்.

## படையினரின் வாகனம் மதகுக்குள் வீழ்ந்தது

(இருபாலை)

நேற்று முன்தினம் இரவு இருபாலை செல்லர் வீதியில், ரோந்தில் ஈடுபட்ட பாதுகாப்பு படையினரின் வாகனம் ஒன்று, அவ்வீதியில் ஏற்கனவே உடைந்திருந்த மதகு ஒன்றுள் வீழுந்துவிட்டது. பின்னர் படையினர் அயலவர்களின் உதவியுடனும் உரல், அலவாங்கு போன்ற உபகரணங்களின் உதவியுடனும் தமது வாகனத்தை மீட்டனர். இதனால் இப்பகுதியில் சிறிது பதறறம் நிலவியது.

## புதிய அதிபர்

(அரியாலை)

திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை அதிபராக திரு. சி. வைகுந்தசாமி அவர்கள் நியமனம் பெற்றுள்ளார். இவர் முன்பு திருகோணமலை இந்துக் கல்லூரியல் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 31ம் நாள் நினைவஞ்சலி

**நந்தீசன் கதிரமலை**

(மஹாஜனக் கல்லூரி மாணவன்)



தோற்றம் 1-5-1965

மறைவு 12-12-1984

எம்மை விட்டுப் பிரிந்த எமது ஆருயிரே உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பெற்றோர், சகோதரர்கள், உற்றார், உறவினர் மற்றும் அவர் இதயத்தில் இடம் பிடித்தோரும்




✻ அரியாலை கண்டிவீதி, சண்முகநாதன்— மகேந்திராதேவி தம்பதிகளின் மகள் பிரியா இன்று தனது பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ உருத்திரபுரம் மயில்வாகனம்— பத்மாவதி தம்பதிகளின் மகன் பிரதீபன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாகிறார்.

✻ வட்டுக்கோட்டை கிழக்கு. தர்மராஜா— கனகேஸ்வரி தம்பதிகளின் மகள் அபிராமி இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ அராலி வீதி, யாழ்ப்பாணம். தாவூத்-வானூன் தம்பதிகளின் மகள நுஸ்ரத் இன்று முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ திருநெல்வேலி மேற்கு. அரசடி அம்மன்வீதி, கனகரத்தினம்- விமலாதேவி தம்பதிகளின் மகன் கதீஷன் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ திருநெல்வேலி, காளி கோவிலடி, அரசரெட்ணம்- செல்வவதி தம்பதிகளின் மகள் அருந்ததி இன்று ஆருவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ கைதடி கிழக்கு, இராசையா விக்னேஸ்வரி தம்பதிகளின் மகள் பாமிஜா இன்று ஒன்பதாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ புத்தூர் கிழக்கு. நடராசா தம்பதிகளின் மகள் றஞ்சினி இன்று தனதுபதின்நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ நல்லூர், சிவன்கோவில் வீதி, குணநாயகம்— சிவபாக்கியம் தம்பதிகளின் மகன் சிவகுமார் இன்று தனது பதின்நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ யாழ். நாலாம் குறுக்குவீதி ஜெகன் புளோறன்ஸ் தம்பதிகளின்மகள் ஜாய்மிஇன்று தன் இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

## ஒட்டுசுட்டான் பாடசாலை வாரம்

(ஒட்டுசுட்டான்)

கல்வியமைச்சின் பாடசாலை வாரம் அனுஷ்டித்தல் திட்டப்படி ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் மாணவர்கள் இதை அமுல்படுத்தினார்கள். பாடசாலைச் சூழலை துப்புரவு செய்தல், தளபாடங்கள் திருத்துதல், வகுப்பறைகளை, சுத்தமாக்கல் முதலிய வேலைகளை மாணவர்கள் செய்தனர்.

## மரம் நாட்டு வைபவம்

(சுழிபுரம்)

புன்னை, சஞ்சீவி, வேம்பு. சவுக்கு போன்ற பல்வேறு பயன்தரு மரங்கள் சிவதரும வள்ளல் கனகராசாவினால் அன்பளிப்புச் செய்து நாட்டப்பட்டன. பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான சுற்றாடலிலும், மூளாய் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய சூழலிலும் இவை நாட்டபபட்டன.

## இடமாற்றம்

(ஊரெழு)

சுன்னாகம் அஞ்சல் நிலையத்தில் கடமையாற்றிவந்த திரு. கே இ. நாகையா, திரு. எம். குணரத்தினம் திரு. இ. இராசேந்தரம ஆகியோர் முறையே திருகோணமலை. பேசாலை, செங்கலடி ஆகிய இடங்களுக்கு இடமாற்றம பெற்றுச் சென்றுள்ளனர்.

கொழும்பு தபால்- தொலைத் தொடர்பு பயிற்சிப் பாடசாலையிலிருந்து திரு. எஸ் லோகேந்திரன், திரு. கே. சந்திரலிங்கம் ஆகியோர் சுன்னாகம் அஞ்சல் நிலையத்திற்கு இடமாற்றம்பெற்று வந்துள்ளனர்.

## சைவ சமய தீட்சை

தைப்பூச நன்னாளில் சைவ சமய தீட்சை செய்ய விரும்பும் கோயில்கள், சனசமூக நிலையங்கள், மன்றங்கள், தொண்டர் சபைகள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் இயற்றிய "நித்திய கருமவிதி சைவ அநுட்டான விதி விளக்கம்" நூலை மில்க்வைற் நிறுவனத்தினரிடமிருந்து இலவசமாகப்பெற்றுக் கொள்ளலாம்.

## பிரஜைகள் குழுவினர்

(மானிப்பாய்)

மானிப்பாய் பட்டின பிரஜைகள் குழுவில் பின்வருவோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். போஷகர். கே. முத்துவேற்பிள்ளை, தலைவர் எஸ். ரி. சாரி. காரியதரிசியும் பொருளாளரும எம. டி. மேதர், உபகாரியதரிசி ஜி. அன்னப்பா ஆகியோருடன் பதினைன்கு அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## வேலணை உதவி அரச அதிபர்

(கண்டுகுளி)

நெடுந்தீவு உதவி அரச அதிபரான திரு. ஆ. மகாலிங்கம் வேலணை உதவி அரச அதிபராகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவில் இரு தினங்கள் தனது கடமையை மேற்கொள்ளுவார்.

**வியாபாரமபெருக விளம்பரம் செய்க**

மாதாந்தம் 36% வட்டி விழாக்கால சலுகை!

15-12-84 முதல்

30-01-85 வரை

36% அதிகூ வட்டி வழங்கும் நிதி நிறுவனம் தமிழர் நிதியம் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ☎ 22437

உறுதியான பாதுகாப்பிற்கும், மேலதிக லாபத்திற்கும் எம்மிடம் வைப்பிலிடுங்கள்.

ஈழமுரசு

28—1—1985


### உதய சிந்தனை

நமது கொள்கைகளை விட்டுக்கொடுத்தால் நாம் கட்டாயமாக விழுந்தே போவோம். எனவே எமது திட்டத்தின் மீது உறுதியாக நின்று பலனைப் பெறுவோம்

- ஜவஹர்லால் நேரு.

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

இதய ஒலி

28-1-85 திங்கட்கிழமை (இரக்தாக்ஷி தை 15)

# சரியான விஷயத்தை சரியாக சொன்னார் சரத்

நாட்டில் அமுல் செய்யப்படும் அவசரகாலநிலை மாதா மாதம் பாராளுமன்றத்தினால் நீடிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறாக நீடிப்பதற்கு வாக்கெடுப்புக்கு விடப்படுவதற்கு முன்னர், அங்கு நடைபெறும் வாதப் பிரதி வாதங்கள் மிகவும் சுவாரஸ்யமானவை. சில உறுப்பினர்கள் நாசூக்காகப் பல உண்மைகளையும் தெரிவித்துவிடுவர்.

வடக்கு, கிழக்கில் நடைபெறும் சகல சம்பவங்களும், அசம்பாவிதங்களும் பட்டியல் போட்டுப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

தீவிரவாதிகளின் செயல், அரச பயங்கரவாதம், இனம் தெரியாதவர்கள் நடத்தும் கொலை, கொள்ளை அனைத்தும் தமிழ்த் தீவிரவாதிகளின் தலைமேல் போடப்படுவதே இப்போது வழக்கமாகி விட்டது.

பயங்கரவாதத்தைத் தடுத்து நிறுத்த பேச்சுவார்த்தை, ஆயுதப் போராட்டம் என்ற பல கோண நடவடிக்கைகளின் அடுத்த கட்டமாகக் ''குடியேற்றம'' என்ற புதிய 'குளிசை' அறிமுகப்படுத்தப்பட இருப்பதை கலவான எம் பி சரத்முத் தெட்டுவேகம மிகவும் அழகாக கடந்த வாரம் பாராளுமன்றத்தில் விபரித்திருக்கின்றார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்றிருக்கும் ஒரேயொரு கம்யூனிஸ்ட் எம். பி.யான சரத்தின் பேச்சு, தென்னிலங்கை அரசியலாளர்கள் பலருக்கும் பிடிக்காதிருக்கலாம். அதற்காக அவரால் பேசாதிருக்க முடியாதே!

எந்தப் பிரச்சினையையும், சரியான முறையில் சிந்தித்து, அரசியல் தீர்க்கதரிசனத்துடன் ஆழமாகவும், அளந்தும் பேசுவதில் வல்லவர் சரத் என்பதை அனைவரும் அறிவர்.

''இந்திய மீனவர்கள் தாக்கப்படுகிறார்கள். இலங்கை ரோந்துப் படகினரால் கொல்லப்படுகின்றார்கள்'' என்று பாரதம் அடுத்தடுத்துக் குற்றம்சாட்டியபோது, ''இதனை விளையாட்டாக எடுக்கவேண்டாம் இது ஒரு பாரதூரமான பிரச்சினையாக மாறும்'' என்று எச்சரித்தவர் சரத்.

அவர் சொல்லி இரண்டு நாட்களுள், ஏழு கடற்படை வீரர்கள் பாரத கடல் எல்லைக்குள் பிடிபட்டதாகச் செய்திகள் வந்தன. வாரங்கள் இரண்டாகியும் அவர்கள் விடுவிக்கப்பட்டதாக உத்தியோகபூர்வ செய்திகள் இன்னமும் வரவில்லை.

''பாரதத்துள் இலங்கை அகதிகள் நாற்பதாயிரம் பேர் இருப்பதாக அந்நாட்டு அரசு மீண்டும் மீண்டும் சொல்லி வருவதை விளையாட்டாக எடுக்காதீர்கள்'' என்று கடந்த வாரம் பாராளுமன்றத்தில் பேசும் போது சரத் தெரிவித்திருக்கின்றார்.

பங்களாதேஷ் பிறந்ததற்கு கிழக்கு வங்காள அகதிகள் பாரதத்துக்குள் பிரவேசித்தது தான் காரணம் என்று பழைய கதையையும் அவர் நினைவூட்டியிருக்கிறார்.

பங்களாதேஷுக்கு ''மருத்துவிச்சி வேலை'' பார்த்த பாரதம், ஈழத்துக்கும் அதே வேலையைப் பார்க்காது என்பதற்கு என்ன உத்தரவாதம் என்ற தொனியில் அவரின் பேச்சு அமைந்துள்ளது.

அதுமட்டுமன்றி, தமிழ்ப் பகுதிகளில் சிங்கள மக்களைக் குடியேற்ற எடுக்கப்படும் நடவடிக்கைகளை ''பைத்தியக்காரத்தனமான செயல்'' என்று பகிரங்கமாகவே தெரிவித்துள்ளார் சரத்.

இதற்கென தமது தொகுதியிலிருந்து இரு நூற்றைம்பது சிங்கள குடும்பங்களைத் தெரிவு செய்யும் அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்கள், அவர்களுடன் சேர்ந்து தாங்களும சென்று தமிழ்ப் பகுதிகளில் குடியிருப்பார்களா என்றும் அவர் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

கொலன்னாவைத் தொகுதியிலிருந்து மட்டும் இரு நூற்றைம்பது பேர் செல்லலாம என்று தெரிவித்த சரத், இங்கு தான் அங்கொட, முல்லேரியா மனநோயாளர் ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசின் சிங்களக் குடியேற்றத் திட்டம் பைத்தியக்காரத்தனமான திட்டம் என்றும், சிங்கள பைத்தியக்காரர்கள் மட்டுமே தமிழ்ப் பகுதிகளில் குடியேறச் செல்லலாம் என்றும துணிச்சலாகப் பேசிய சரத்தின் தீரத்தை வரவேற்க வேண்டும்.

ஆனால் ஆட்சியாளர்கள் சரத்தின் பேச்சை ''பைத்தியக்காரத்தனமான பேச்சு'' என்று புறக்கணித்து விடுவார்களோ என்பதே எமக்கு அச்சத்தைத் தருகின்றது.

அப்படியானால், யாருக்குப் பைத்தியம் என்பதை, காலம் தான் நின்று பதில் சொல்லும்.

## மார்ச் 12ல் ஜெனீவாவில் மீண்டும்

# ரஷ்யாவும் அமெரிக்காவும் சந்தித்துப் பேச இணக்கம்!

(லண்டன)

சோவியத் யூனியனும் அமெரிக்காவும் ஆயுதக் குறைப்பு தொடர்பான தமது பேச்சுவார்த்தைகளை மார்ச்மாதம் பன்னிரண்டாம் திகதி ஜெனீவாவில் மீண்டும் தொடரவுள்ளன. இதனை வாஷிங்டன் மாஸ்கோ அறிக்கைகள் நேற்று ஊர்ஜிதம் செய்தன. மாஸ்கோவின் பிரதிநிதியாக திரு. விக்டர் காபோ இச்சந்திப்பில் கலந்துகொள்ளவிருக்கிறார் தனது நிலைப்பாட்டிலிருந்து சோவியத் யூனியன் விட்டுக்கொடுக்காது என்றும் ஐரோப்பியாவில் அமெரிக்க ஏவுகணை மீண்டும் பிரயோகத்துக்கு வருவது நிறுத்தப்பட வேண்டும், விண்வெளியில் ஆயுதபாவனை நிறுத்தப்பட வேண்டியதும் முக்கியமானதே என்றும் சோவியத் யூனியன் நேற்று வலியுறுத்தியது.

அமெரிக்கா ஆயுத உற்பத்தியையும் பாவனையையும் அதிகரித்து விண்வெளியிலும் இந்நிலையினை நீடிப்பது பாதுகாப்பு நோக்கத்துக்காக அல்லஎன்றே தான் கருதுவதாகவும் சோவியத் யூனியன் மேலும் தெரிவித்துள்ளது.

இம்மாத முற்பகுதியில் ஜெனீவாவில் சோவியத் யூனியனும் அமெரிக்காவும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. இப்பேச்சுவார்த்தைகளில் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. சூல்ட்ஸும், சோவியத் யூனியன் வெளிநாட்டமைச்சர் திரு. குரொமிக்கோவும் கலந்துகொண்டிருந்தனர்.

## இத்தாலிய மந்திரி பாராட்டு

(ரோம்)

''பாரதம் பல்வேறு துறைகளிலும் வியக்கத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது'' என்று இத்தாலிய வெளியுறவு மந்திரி திரு அன்ரியோட்டி பாரதக் குடியரசு தினத்தையொட்டி இத்தாலியின் முன்னணி நாளேடு ஒன்றிற்கு அளித்த சிறப்புச் செய்தியில் கூறியிருக்கிறார். ''மண்டல சார்பற்றநாடுகளின் தலைமைப் பொறுப்பில் பாரதம் பெரும் பணிபுரிகிறது'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பங்களாதேஷில் அணு உலை

(டாக்கா)

பங்களாதேஷ் டாக்காவுக்கு அருகே அணு உலை ஒன்றினை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இத்தகவலை பங்களாதேஷ் ஜனாதிபதி எர்ஷாத் நேற்று வெளியிட்டார்.

## இவருக்கும் பத்மபூஷண் கௌரவம்

(சென்னை)

குடியரசு தினத்தையொட்டி வழங்கப்படும் பத்மபூஷண் விருது தமிழகத்தின் பிரபல எழுத்தாளர்களில் ஒருவரான திரு. கசி. சிவசங்கரம் பிள்ளைக்கும் கிடைத்துள்ளது. பாரதத்தின் ஆக உயர்ந்த விருதான 'பாரதரத்ன' இருவருடங்களாக எவருக்கும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

## ஐ. நா. சபை செயலாளர் கருத்து

# அணு ஆயுதப் போர் உலகம் முழுவதையும் அழித்துவிடும்

(நியுயோர்க்)

''பயங்கர அணு ஆயுதப் போர் உலகையே அடியோடு அழித்துவிடும்'' என்று ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் திரு. குயெலார் புதுடில்லியில் இன்று ஆரம்பமாகும் அணு ஆயுதக் குறைப்புசம்பந்தமான உச்சி மாநாட்டிற்கு அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

''அணு ஆயுதப் போரில் யாருமே வெற்றியாளர்களாக இருக்கமுடியாது அணு ஆயுதங்களை ஒழிக்க மனச் சாட்சியும் தெளிந்த சிந்தனையும் வேண்டும்'' என்றும் அவர் தனது இச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## ''பாரத பணி அளப்பரியது''

(புதுடில்லி)

''உலக சமாதான முயற்சியில் பாரதம் ஆற்றிவரும் பணி அளப்பரியது'' என்று கிரேக்கப் பிரதமமந்திரி திரு. கபான்ரூ நேற்று புதுடில்லியில் தெரிவித்தார்.

புதுடில்லியில் இன்று ஆரம்பமாகும் உச்சிமாநாடு ஒன்றில் கலந்து கொள்ளும் பொருட்டு அவர் இங்குவந்துள்ளார்.

## முக்கிய மந்திரி ராஜினாமாவினால்

# லெபனான் அரசில் புதிதாக குழப்பம் உருவாகும் நிலை

(லண்டன்)

லெபனான் அரசாங்கத்தில் மிக முக்கிய மந்திரிகளில் ஒருவராக விளங்கிய சாலி மாரிகோஸ் தனது பதவியிலிருந்து ராஜினாமச் செய்துள்ளார்.

இவரது ராஜினாமா புதிய அரசியல் குழப்பத்தை உருவாக்கும் எனக் கூறப்படுகிறது. முஸ்லிம்களின் மதிப்பு மிக்க தலைவராவார் இவர்.

ஏற்கனவே பலவீனப்பட்டுள்ள லெபனான் தேசிய அரசுக்கு இது மேலும் தலையிடியைக் கொடுத்துள்ளது. இவரது ராஜினாமாவை வாபஸ் பெறுமாறு ஜனாதிபதியும், லெபனான் பிரதம மந்திரி திரு. கராமியும் கோரியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## எம். ஜி. ஆர். நிலை டாக்டர் தகவல்

(சென்னை)

முதலமைச்சர் திரு. எம் ஜி இராமச்சந்திரனால் தனது வலக் கையையும், வலக் காலையும் இப்போது அசைத்து செயற்படுத்த முடிகிறது என்றும் ஆனால் பேசுவதில் இம் முன்னேற்றம் உண்டென்று கூறுவதற்கில்லை என்றும் சென்னை அப்பலோ மருத்துவமனை பிரதம டாக்டர் பி. சி. ரெட்டி சென்னையில் கூறினார்.

நியுயோர்க் சென்று முதல் வரைச் சத்தித்தபின் அவர் சென்னை திரும்பியுள்ளார்.

அவரால் எவரது உதவியும் இன்றி நடக்க முடிகிறதென்றும் அவரால் தகவல் வெளியிடப்பட்டது. அவருக்குத் தொடர்ந்து பேச்சுப் பயிற்சி அளிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## அணு ஆயுதக் குறைப்பு:

# ஆறு நாடுகள் உச்சிமகாநாடு டில்லியில் இன்று ஆரம்பம்

(புதுடில்லி)

அணுஆயுதக் குறைப்பு சம்பந்தமான ஆராய்வின் பொருட்டு ஆறுநாடுகள் கலந்து கொள்ளும் உச்சிமாநாடு இன்று புதுடில்லியில் ஆரம்பமாகிறது. பாரதம் ஆர்ஜன்டினா, கிரேக்கம், சுவீடன் உட்பட ஆறுநாடுகள் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றன.

''உலக சமாதானத்துக்கும் படைக்குறைப்புக்கும் இம்மாநாடு ஓர் மாபெரும் முயற்சியாகும். உலக சமாதானத்துக்கு இம்மாநாடு பெருமளவு உதவும் என ஐக்கியநாடுகள் சபையும் சோவியத்யூனியனும், அமெரிக்காவும் கருதுகின்றன'' என்று இம்மாநாட்டில் கலந்து கொள்ள வந்துள்ள கிரேக்கப் பிரதமமந்திரி திரு. கமான்ரூ இந்திய வானொலிக்கு அளித்த பேட்டி ஒன்றில் கூறியிருக்கிறார்.

''மண்டல சார்பற்ற நாடுகள் இயக்கத் தலைமைப் பதவி ஏற்று திருமதி இந்திரா காந்தி ஆற்றிய பணியும் அதன்பின் திரு. ராஜீவ் காந்தி ஆற்றி வரும் பணியும் குறிப்பிடத்தக்கவை இம்மநாடுபாரதத்தில் நடப்பது மிகப் பொருத்தமே'' என்றும் அவர் தெரிவித்தார்.

சாந்தி - (யாழ்நகர்)

12-1-85 முதல்

10.30, 2.15 மட்டும்

கமல், சுலக்ஷனா, ராதா, தங்கவேலு நடித்த

A. V . இன்

தூங்காதே தம்பி தூங்காதே

(ஈஸ்மன் கலர்)

ஈழமுரசு

## ஈழத்தமிழருக்கு குரல் கொடுக்கும் கோசல்ராம் எம். பி. காலமானார்

(புதுடில்லி)

ஈழத்தமிழ் மக்களுக்காக அடிக்கடி நாடாளுமன்றத்தில் குரல்கொடுத்து வந்த இந்திரா காங்கிரஸின் திருச்செந்தூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரான திரு கே. ரி. கோசல்ராம் புதுடில்லியில் காலமானார். மரணச் செய்தி கேட்டு பிரதமர் ராஜீவ் காந்தி, தி மு க. தலைவர் கலைஞர் கருணாநிதி, தமிழக நிதி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் உட்பட அநேக தலைவர்கள் அதிர்ச்சியும் கவலையும் தெரிவித்துள்ளனர். அறுபத்தொன்பது வயதான கோசல்ராமின் சடலம் நேற்றிரவு சென்னை கொண்டுவரப்பட்டது. கடந்த வாரம் லோக்சபாவில் இலங்கைப் பிரச்சினைகள் தொடர்பாக பல கேள்விகளை இவர் எழுப்பியதும் குறிப்பிடத்தக்கது.

### பாதுகாப்பு நடவடிக்கையாம்:

# காணிப் பதிவேடுகள் கோட்டைக்குள் தாய் உறுதிகளைப் பரிசீலிப்பது சிரமம்

(அரியாலை)

யாழ்ப்பாணம் காணிப் பதிவகத்தில் கோவைப்படுத்தி வைக்கப்பட்டிருந்த 1940ம் ஆண்டில் இருந்து இற்றை வரையிலான இணைப்பிரதிகள் பதிவுப் புத்தகங்கள் அனைத்தும் பாதுகாப்பு நலன் கருதி கோட்டைக்குள் எடுத்துச் செல்லப்பட்டன. இவை மூன்று மாத காலத்திற்கு அங்கு வைக்கப்பட்டிருக்கும் என அறியப்படுகிறது.

இதனால் 1940ம் ஆண்டுக் குட்பட்ட பதிவேடுகள் இணைப் பிரதிகளைத் தேடுதல் செய்வதும், பிரதிகள் வழங்குவதும் தற்போது நடைபெறமாட்டாது. ஆனாலும் குறிப்பிட்ட ஆண்டிற்கு பிற்பட்ட வேலைகள் வழமை போல நடைபெறும். பதிவு வேலைகளும் தொடர்ந்து நடைபெறும்.

இதனால் பொதுமக்கள், சட்டத்தரணிகள் பாதிக்கப்படுவார்கள் புதிதாக உறுதிகள் எழுதும்போது தாய் உறுதிகளைப் பரிசீலிப்பதில் சிரமம் ஏற்படும். வங்கியில் கடன் எடுப்பது, நீதிமன்றங்களில் பிணை எடுப்பது சம்பந்தமான வேலைகளும் பாதிக்கப்படும்.

பதிவேடுகளைக் கட்டி லொறிகளில் ஏற்றி இறக்கும் வேலைகளுக்காக காணிப் பதிவகம் இம்மாதம் 21ந் திகதியில் இருந்து 25ந் திகதி வரை தற்காலிகமாகச் செயற்படாமல் இருந்தது. இன்று திங்கட்கிழமை முதல் வழமைபோல வேலைகள் நடைபெறும்.

### இன்று இடைத்தேர்தல்:

## வட சென்னை லோக்சபா; இரண்டு சட்டசபை தொகுதி

(சென்னை)

சுயேச்சை வேட்பாளர் தளபதி சைமனின் கொலையால் ஒத்திவைக்கப்பட்ட வட சென்னை லோக்சபா தொகுதிக்கும், எழும்பூர், பெரம்பூர் சட்டசபைத் தொகுதிகளுக்கும் இன்று தேர்தல் நடைபெறுகிறது.

வடசென்னை தொகுதியில் முன்னாள் லோக்சபா துணைச் சபாநாயகர் ஜி லட்சுமணன் இந்திரா காங்கிரசிலும் என். வி. என். சோமு தி.மு.க.விலும் போட்டியிடுகிறார்கள். இவர்கள் தவிர 24 சுயேச்சை வேட்பாளர்களாக மொத்தம் 26 பேர் இத்தொகுதியில் போட்டியிடுகின்றனர். பெரம்பூர் சட்டப்பேரவைத் தொகுதிக்கு அ. தி. மு. க சார்பில முன்னாள் அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்துவும் தி. மு.க.சார்பில பரிதிஇளம வழுதியும் ஐந்து சுயேச்சை உறுப்பினர்களும் போட்டியிடுகின்றனர். எழும்பூர் சட்டப் பேரவைத் தொகுதியில் அ.தி.மு.க, தி.மு.க. வேட்பாளர்களோடு மூன்று சுயேச்சைகள் உட்பட மொத்தம் ஐந்து வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

### டில்லியில் இன்று

## ஆறு நாடுகளின் உச்சி மகாநாடு

உலக சமாதானத்தையும் படைக்குறைப்பையும் பற்றிய ஆறுநாடுகளின் உச்சி மகாநாடு இன்று டில்லியில் ஆரம்பமாகிறது இதில் சுவீடன் பிரதமர், கிரேக்கப் பிரதமர், மெக்சிக்கோ அதிபர், தான்சானிய அதிபர், ஆர்ஜென்டீனா அதிபர் ஆகிய ஐந்து நாடுகளின் தலைவர்களோடு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் கலந்து கொள்கிறார். இம்மகாநாட்டின் கருத்துக்களை வல்லரசுகள் செவிமடுக்குமெனத் தாம் நம்புவதாக இத்தலைவர்கள் தெரிவித்தனர்.

### இலங்கை நிலை பற்றி விளக்க

## அமைச்சர் ஹமீத் பிரிட்டன் பிரான்ஸ் பயணமானார்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் நாட்டிலுள்ள தற்போதைய நிலை குறித்து பிரிட்டிஷ், பிரான்ஸ் அரசாங்கங்களுக்கு விளக்கும் பொருட்டு வெளிவிவகார அமைச்சர் ஏ. ஸி. எஸ் ஹமீதை நேற்று அனுப்பி வைத்துள்ளது.

இவர் மேற்படி நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களையும் ஏனைய ஸ்தாபனப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசுவார் என்று நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

## பெற்றோல் உ நிமயாகம்

யாழ்ப்பாணத்தில் நிலவும் பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல் ஆகியவற்றின் தட்டுப்பாட்டை நீக்க உதவி வெட்டு பௌசர்களில் இவை கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டன.

வாகன பெர்மிட் பெற்றவர்களுக்கு காலொன்றுக்கு ஐந்து லீற்றரும், மோட்டார் சைக்கிள்களுக்கு மூன்று லீற்றர் என்ற வீதத்தில் பெற்றோல் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

### கல்வியங்காடு...

— 1ம் பக்கத் தொடர்

டன் சென்று கொண்டிருந்த வான் ஒன்றின் மீதும் ஹெலிகப்டரிலிருந்து சுடப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

## நால்வர் விடுதலை

(அரியாலை)

அரியாலையில் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டவர்களுள் நால்வர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

### றிசேர்ட் மர்பியுடன்..

—1-ஆம் பக்கத் தொடர்

காரத்துக்குப் பொறுப்பான இணையமைச்சராக உள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு ஜோர்ஜ் சூல்ட்ஸ் அவர் ஆலோசனைப் படி அனுப்பப்பட்டார் என்றும் அமெரிக்க அதிகாரிகள் பலரைச் சந்திக்கவுள்ள அவர், அவர்களிடம் உதவிகளை நாடுவார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இப்போதைய பிரச்சினை தொடர்பான சில உதவிகளை அமைச்சர் அத்துலத்முதலி மர்பியிடம் கோரலாமெனவும் தெரியவந்துள்ளது.

## இன்று சந்திப்பர்

கோட்டைக்கல்லாறில் நேற்று முன்தினம் பாதுகாப்புப் படையினரால் இளைஞர்கள் கைது செய்யப்பட்டது சம்பந்தமாக மட்டுநகர் பிரஜைகள் குழுத்தலைவர் திரு. பிரின்ஸ் காசிநாதர், மட்டக்களப்பு மாவட்ட இணைப்பதிகாரியுடன் இன்று பேச்சுவார்த்தை நடாத்தவிருக்கிறார்.

### வல்வெட்டித்துறை...

—1-ஆம் பக்கத் தொடர்

வம் நடைபெற்றதாம். ஆயுதப் படையினர் பெருந்தொகையான எறிகுண்டுகளையும், வெடிமருந்துகளையும் கைப்பற்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எவராவது கைது செய்யப்பட்டது பற்றி அறிவிக்கப்படவில்லை.

### கச்சதீவுக்கருகில்...

—1ம் பக்கத் தொடர்

வைத்து இந்திய அதிகாரிகளிடம் தமிழக மீனவர்களை கடற்படையினர் ஒப்படைப்பார்கள் என்று சென்னையில் அறிவிக்கப்பட்டது. இதன் பின்னரே மதுரையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏழு இலங்கை கடற்படை வீரர்களும் விடுவிக்கப்படுவர் எனத் தெரியவந்துள்ளது.

### மாதகலில் மீண்டும்...

—1-ம் பக்கத் தொடர்

இதனால் கரைப்பகுதிகளில் வாழ்ந்துவரும் பலர் நேற்றுக் காலை தமது வீடுகளைவிட்டுப் பயத்தினால் வெளியேறினர். ஆகாயத்தில் மின்பந்து போன்ற பொருள் ஒன்று வெடித்து வீழ்ந்ததாகவும் நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

### கண்ணிவெடி...

—1-ம் பக்கத் தொடர்

ஒல் முப்பது யார் தூரத்தில் கண்ணிவெடி வெடித்ததால் எவரும் காயமின்றித் தப்பித்துக்கொண்டனர்.

ஆனாலும் இச்சம்பவத்தை அடுத்து சீருடையினர் அயல் பகுதிகளில் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தினால் காயமடைந்த இருவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விக்னேஸ்வரராஜா (23) துரைராஜா (56) ஆகியோரே சூட்டுக்காயங்களுக்கு இலக்கானவர்கள். துரைராஜாவின் மூளைப்பகுதியைச் சன்னங்கள் தாக்கியதால் சத்திரசிகிச்சைக்கும் உட்படுத்தப்பட முடியாத நிலையில அவர் இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

கண்ணிவெடி புதைக்கப்பட்டிருந்த பகுதியைச் சேர்ந்த பலர் தாக்கப்பட்டுள்ளதாகவும், பலர் கைது செய்யப்பட்டதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

### அடம்பன் சூட்டுச்..,

1-ம் பக்கத் தொடர்

கமே இதற்குக் காரணமாகும். அதேவேளையில் அப்பகுதியில் நேற்று முழுவதும் சத்தவெடிகள் கேட்ட வண்ணம் இருந்தன.

சுடப்பட்ட நால்வரில் ஒருவர் உயிருடன் போராடிக் கொண்டிருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து அவரை ஏற்றிவர அடம்பன் ஆஸ்பத்திரியிலிருந்து சென்ற ஜீப் ஒன்றின் மீது வழியில் குண்டு வீசப்பட்டதாகவும், அதனையடுத்து சாரதியும் இரு ஆஸ்பத்திரி ஊழியர்களும் ஜீப்பில் இருந்து பாய்ந்து தப்பியோடியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரணமானவர்கள் இப்பகுதியில் கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வருபவர்களென்றும், சரளமாகத் தமிழில் பேசக்கூடியவர்களென்றும் தெரியவந்துள்ளது.

இதே வேளையில் மன்னாரிலிருந்து நேற்று சங்குப்பிட்டிக்குச் சென்ற இரண்டு மன்னார் டிப்போ பஸ்கள் திரும்பி வந்து சேரவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

### வங்கிக் கொள்ளை..

1-ம் பக்கத் தொடர்

மன்கோவில் பதக்கம், சங்கிலி, நெற்றிப்பட்டம், மூக்குத்தி ஆகியவை தமது பெட்டியில் வைக்கப்பட்டிருந்ததாக பிரசைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி ஆர் பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

தமது சொந்த நகைகளைத் தராதுவிட்டாலும் பரவாயில்லை, கோயில் நகைகளையாவது எடுத்தவர்கள் தருவது நல்லது என்று அவர் ஈழமுரசுக்குத் தெரிவித்தார்.

மேலும் சில ஆலயங்களின் நகைகள் உட்பட, டாக்டர்கள், வழக்கறிஞர்கள், வர்த்தகப் பிரமுகர்கள் பலரினதும் நகைகள் இங்கு கொள்ளையடிக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை தம்பையா

அராலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சுண்டுக்குளியை வசிப்பிடமாகக் கொண்டவரும், முன்னைநாள் P. W. D. கந்தோரில் பிரதம லிகிதராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவருமான தம்பிப்பிள்ளை தம்பையா காலமானார். இவர் காலஞ் சென்ற நல்லூரைச் சேர்ந்த இரஞ்சிதயமாவின் கணவரும், நடராஜா (கொழும்பு), ஜீவராஜா (U. K.), நவரட்ணராஜா (சவூதி) சாந்தகுமார் (பஹ்ரேன்), யோகேஸ்வரி (சுண்டுகுளி) திலகேஸ்வரி (சுதுமலை), விக்னேஸ்வரி (SOUTH AFRICA) ஆகியோரின் தகப்பனும், திரு இராசையா (நில அளவைப் பகுதி), லோகநாதன் (நகரசபை), மகாலிங்கம் (SOUTH AFRICA), காலஞ்சென்ற வரதலட்சுமி நடராஜா, சாரதா ஜீவராஜா (U K), கமலா நவரட்ணராஜா, ராஜேஸ்வரி சாந்தகுமார் ஆகியோரின் மாமனாரும் ஆவார். பூதவுடல் நேற்று ஞாயிற்றுக்கிழமை (27-1-85) பிற்பகல் துண்டி மயானத்தில தகனம் செய்யப்பட்டது. இல: 6, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டுக்குளி.


அன்பார்ந்த பிரயாணிகளே !

யாழ்ப்பாணம் — வவுனியா, வவுனியா — யாழ்ப்பாணம்

தினசரி பஸ் சேவை

SAFETY TRAVELS

30-1-85 புதன்கிழமை தொடக்கம் நடாத்த விருப்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். கொழும்பு நோக்கிச் செல்லும் புகையிரதப் பயணிகள் வவுனியா வரைக்கும் ஆசனங்களைப் பதிவு செய்து கொள்ளுவதற்கு பண்ணையிலுள்ள எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

சேவ்ரி ரவல்ஸ் ஸ்தாபனத்தார்


'ஈழமுரசு சாயிபாபா அடவர்டைசிங் அச்சகஸ்பதிஸ் ஸ்தாபனத்தாரால், 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 28-1-85 திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.